**செ.வெ.எண். 184/2018** **நாள்: 05.05.2018**

**காஞ்சிபுரத்தில் கிராம சுயாட்சி இயக்கத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய தொழிலாளர் நலத்துறையின் சார்பு செயலர் திரு.நவில் கபூர் இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று 87 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.43.50 லட்சம் சமுதாய மூதலீட்டு நிதியினை வழங்கினார்.**

காஞ்சிபுரம் கே.பி.கே.இரத்னாபாய் திருமண மண்டத்தில் கிராம சுயாட்சி இயக்கத்தின் சார்பில் மாவட்ட அளவிலான ஆஜீவிகா மற்றும் கௌஷல் சிறப்பு நாள் கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய தொழிலாளர் நலத்துறையின் சார்பு செயலர் திரு.நவில் கபூர் இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 25 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணைகளையும், DDU-GKYல் தேர்வு செய்யப்பட்ட 25 இளைஞர்களுக்கு பயிற்சிக்கான அனுமதி ஆணையையும், 87 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தலா ரூ.50 ஆயிரம் வீதம் ரூ.43.50 லட்சம் சமுதாய மூதலீட்டு நிதியும், 40 நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறுதொழில் புரிந்திட தனிநபர் கடனாக ரூ.3.55 லட்சமும், 3 பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்பினையும், 9 நபர்களுக்கு LMV ஓட்டுநர் உரிமமும் வழங்கி, திரு.பி.ஜெகதீசன் என்பவருக்கு சிறப்பு தொழில் முனைவருக்கான சான்றினை வழங்கி, பாராட்டி பேசியதாவது,

இந்த திட்டத்திற்கு சிறப்பு அலுவலராக டெல்லியில் இருந்து வந்துள்ளேன். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 158 ஊராட்சிகளில் கடந்த 10 நாட்களில் 20 ஊராட்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளேன். இத்திட்டத்திற்கு இம்மாவட்ட மக்கள் நல்ல வரவேற்பையும் ஒத்துழைப்பையும் கொடுத்து, ஒரு வெற்றிகரமான திட்டமாக மாற்றியுள்ளார்கள். இந்த 7 திட்டங்களிலும் இதுவரை சேராமல் இருப்பவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களை அணுகி தற்போது கூட அத்திட்டங்களில் சேர்ந்து பயன்பெறலாம். மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மகிளர் திட்ட அலுவலர் உட்பட இத்திட்டத்தில் பணியாற்றி வரும் அனைத்து அலுவலர்களின் பணிகளும் திருப்திகரமாக உள்ளது. மேலும், அனைத்து அலுவலர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டங்கள் 100 சதவீதம் மக்களிடையே சென்றடைய வேண்டிய திட்டமாகும். அதன்படி மக்கள் அனைவரிடமும் 100 சதவீதம் சென்றடைந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. கடந்த 20 நாட்களாக இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் அனைத்து மக்கள் மற்றும் பயனாளிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

கிராம சுயாட்சி இயக்கத்தின்கீழ் செயல்படுத்தப்படும் 7 அம்ச திட்டங்களை குறித்து கருத்துரையும், DDU-GKYல் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் இளைஞர்களுக்கு பயிற்சி குறித்த விளக்கவுரை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் அமைப்புகள் மூலம் வழங்கப்பட்டது. முன்னதாக மத்திய தொழிலாளர் நலத்துறையின் சார்பு செயலர் அவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த 7 அம்ச திட்டங்கள் சார்ந்த கண்காட்சிகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயகுமார், முன்னோடி வங்கிகளின் மேலாளர் திரு.ஹெப்சூர் ரஹ்மான், RSETI இயக்குநர் திரு.பத்ரி நாராயணன், மகிளர் திட்ட இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு.ஜி.ஸ்ரீனிவாசராவ், மாவட்ட வழங்கல் அலுவலர் (பொ) திரு.முரளி, எல்.ஐ.சி. மண்டல மேலாளர் திரு.குமார், நிதிசார் கல்வி நிறுவனர் திரு.ஏகாம்பரம், மின்சார வாரிய உதவி இயக்குநர் திருமதி.சௌபாக்ய லட்சுமி, இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் முதுநிலை மேலாளர் திருமதி.என்.கீதா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**

**காஞ்சிபுரம்.**